
Laodicean Times

லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு13 தொகுதி 1 ஜனவரி - மார்ச் 2023




**R 5500**

# உன் தேவனாகிய கர்த்தரே உண்மையுள்ள தேவன்

## "The Lord Thy God is a Faithful God"

ஆதார வசனங்கள் : "ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்தரித்து அவரைத் துதிக்குஞ் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்" – சங்கீதம் 66:8,9

இந்த சங்கீதத்தில் தீர்க்கதரிசியாகிய தாவீது, தேவனைத் துதிக்க உலக முழுவதையுமே அழைக்கிறார். "பூமி முழுவதும் உம்மைத் தொழுதுகொள்வதாக: உம்முடைய நாமத்தை துதித்துப் பாடுவதாக" என தீர்க்கதரிசன பாஷையில் உரக்கச்சொல்கிறார். பின்பு, இஸ்ரயேல் சம்பந்தமான செயல்தொடர்புகளில், தேவனுடைய வல்லமை அருமையாக வெளிப்படுத்தப்–பட்டதை மீண்டும் எண்ணிப்பார்க்கிறார். கர்த்தரை ஸ்தோத்திரஞ்செய்யவும் அவருடைய புகழை, எங்கும் பிரஸ்தாபம் பண்ணவும் ஜனங்களை அழைக்கிறார். தம்முடைய ஜனங்களுடனான யேகோவா தேவனின் செயல்தொடர்புகளை பின்னோக்கிப் பார்த்து, அவர்தொடர்ந்து சொல்கிறார்.

"தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர். எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனுஷரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப் பண்ணினீர், தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம். செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்துவிட்டீர்" – சங்கீதம் 66:10–12"

தேவனுடைய வீட்டிற்குள் போவேன் என்றும், தன்னுடைய இக்கட்டான நேரங்களில் தான் செய்த பொருத்தனைகளை செலுத்துவேன் என்றும் சங்கீதக்காரன் விளம்புகிறார். தேவன் அவருக்குச் செய்த நன்மைகளை மீண்டும் எண்ணிப்பார்க்கிறார். தம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிக்கப்பட்டதற்காகவும், தாம் உயர்த்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்டதற்காகவும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு அவருடைய புகழை உயர்த்தினதாக கூறுகிறார். கடந்த கால சரித்திரத்தில் கர்த்தருடைய வழிநடத்துதல்களையும் அவருடைய எல்லா நன்மைகளையும் நினைவுகூர்ந்து, அவருடைய உன்னத நாமத்துக்கு துதிகளை ஏறெடுக்கும்படி இஸ்ரயேலருக்கு புத்திமதி கூறுகிறார். இஸ்ரயேல் ஜனங்களை எகிப்தினுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களுடைய வனாந்தர பிரயாணம் முழுவதுமாக பாதுகாத்ததோடு, இப்போதுவரை அவர்களை தேவன் காத்துவருகிறார் என்றும் கூறுகிறார்.

தேவன் அவர்களை அறுப்புண்டுபோக அனுமதிக்காமல் அவர்களை ஜீவனோடு வைத்திருப்பதை தாவீது ராஜா நினைப்பூட்டுகிறார். "அவர்கள்கால்களை தள்ளாட அவர் விடுவதில்லை". அவர்கள் நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் உள்ளவர்களாக இருக்கும்வரை விரோதிகளால் அழிக்கப்படவில்லை. அதன்பின்னர் அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலும், தாறுமாறுகளினாலும் தேவன் அவர்களை பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டுபோகப்படும்படிசெய்தார். ஆனாலும் அவர் அவர்களை நிரூபிக்கவும், அதைத்தொடர்ந்து தகுதியுள்ள எல்லாரையும் அவர்களுடைய சொந்த தேசத்திற்கு மீண்டும்

## இம்மாத வெளியீட்டில்

.. தேவனாகிய கர்த்தரே உண்மை தேவன் ... 1
.. கிறிஸ்தவ சுயாதீனம் ... 4
.. *கனி கொடாத அத்திமரம் ...* ... 5
.. *வழியும், சத்தியமும், ஜீவனும்* ... 9
.. *எல்லாம் புதிதாயின – கவிதை* ... 16

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

கொண்டுவரும்படியும், அவர்களுடைய நன்மைக்கேதுவாகவே அது இருந்தது.

### ஆவிக்குரிய இஸ்ரயேலரும் அவரது புகழை பிரஸ்தாபப்படுத்துவார்களாக

ஆனால் இந்த சங்கீதம் மாம்சீக இஸ்ரயேலர்களோடு தொடர்புடைய முதன்மை முக்கியத்துவமாக இருந்தாலும், நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் செய்த பொருத்தனைகளுடன் இசைவாக இவ்வார்த்தைகள் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கே மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. நம் கர்த்தர் நம்மை இவ்வுலகத்திலிருந்து கொண்டுவந்திருக்கிறார். பெரிய அடிமைத்தனத்தில் நடத்துகிறவனாகிய சாத்தானிடமிருந்து நம்மை விடுதலையாக்கினார். நம்முடைய வனாந்தரப் பிரயாணத்தில் நம்மை வழிநடத்தி, பரலோகத்திலிருந்து வருகிற மன்னாவினால் நம்மைப்போஷிக்கிறார். நாம் பிழைத்திருக்கும்பொருட்டு நமக்காக அடிக்கப்பட்ட மாபெரும் கன்மலையின் ஜீவத்தண்ணீரை பருகுவதற்கு நமக்கு அளித்திருக்கிறார். வனாந்தர வழியின் புழுதியிலிருந்து நம் பாதங்களை கழுவினார். அவருடைய புத்திரர்களாக நம்மை சிட்சித்து, உண்மையோடு ஒழுங்குபடுத்துகிறார். கடுமையான பாதை முழுவதிலும் நமக்கு முன்பாக செல்கிறார். எல்லா ஆபத்துக்களிலும் தீங்குகளிலுமிருந்து நம்மைப் பாதுகாப்பதற்காக நமக்கு பின்புறமாகவும் இருக்கிறார். மாம்சீக இஸ்ரயேலருக்கே நன்றியறிதலுக்கும் துதிப்பதற்கும் பெரும் காரணம் இருக்குமானால், அவருடைய ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நம்மீது அவருடைய அன்பும் அக்கறையும் அற்புதமாக வெளிப்படுத்தப்பட்டதற்கு, நம்முடைய மனப்பான்மை எப்படி இருக்கவேண்டும்! உண்மையாகவே, தற்காலத்திலும் சரி வருங்காலத்திலும் சரி, இப்பூமியில் நம்மைப்போல் வேறு யாரும் இல்லை, நம் தேவனை நாம் துதிக்கலாமா!

கவிஞருடன் சேர்ந்து நாம் சொல்லக்கூடும்:

எனது நம்பிக்கைகளை விட சிறந்தவரே
எனதெல்லா பயங்களை விட சிறந்தவரே
எனது முறிவுபட்ட வேலைகளில் பாலமானவரே
எனது கண்ணீரின் வானவில்லானவரே
எனது கடற்பாதையில் என்னைக் காத்த பேரலைகள்
எனது கர்த்தரை தங்கள் முகட்டில் சுமந்து சென்றனவே!
எனது வனாந்திர பயண நாட்களில் தங்கியிருந்தபோது
என்னால் அவரது அன்பின் மீது இளைப்பாறுதலுக்கு சாயமுடிந்ததே
அவர்களது பொக்கிஷசாலையாயிருந்த என் கைகளை அவர் காலிசெய்தார்
அவரது உடன்படிக்கையின் அன்பு வெளியானதுவே
எனது வேதனையுள்ள இதயத்தில் ஒரு காயமும் இல்லை, ஆனால்
அவரது சுவாசத் தைலம் குணமாக்கிவிட்டதுவே
ஞானம் கற்பித்து, சோதித்ததில்
ஒ, மென்மையாய் உண்மையாய் இருந்தது, சிட்சிக்கும் காயம்
அவர் நேசித்த ஆத்துமா அவரை நம்பும்வரை,
பூமியில் வேறுஎதுவும்இல்லை

நான் பார்க்கமுடியாத இடங்களில் நான் அறியாத வழிகளில் என் நடைகளைக் காத்தார்
கர்த்தரை மட்டும் நான் பின்பற்றினபோது மட்டுமே
வளைந்து நெளிந்த பாதை நேராகவும், கரடுமுரடானவை சமமாகவும் இருந்ததுவே
இனிமையான பனைமர கீற்றுக்களுக்காகவும்,
வழியில் உண்டாயிருக்கிற நீர்ச்சுனைகளுக்காகவும்,
இரவில் ஒளிரும் அக்கினி ஸ்தம்பத்திற்காகவும் நான் இன்னும் அவரைப் புகழுகிறேன்

பகலில் வழிகாட்டும் மேகஸ்தம்பத்துக்காகவும் துதிப்பேனே.
அச்சம் நிறைந்த ஓய்வில் எந்த ஒரு காவலும் இல்லை
ஆனால் அன்பின் சில வாக்குத்தத்தங்கள் பிரியப்படுத்துகின்றன
எல்லா அச்சங்களையும் விட எதிர்காலம் மிகச் சிறந்திருக்கும் என்று கடந்த காலத்திலிருந்து படித்தேன்
வனாந்திரத்தில் துளிர்த்தகோலுடன் பொற்பாத்திரத்தில் வைக்கப்பட்ட மன்னாவும்
கர்த்தரின் நியாயப்பிரமாணமும் பெட்டியில் பாதுகாப்பாக இருப்பதுபோல்
என் தேவனின் உடன்படிக்கையின் பாதுகாப்பில் நான் உள்ளேனே!

### இருண்ட யுக முழுவதிலும் இருந்த சில உண்மையுள்ளவர்கள்

நம்முடைய தேவன் தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் தோல்வியடையச்செய்வதில்லை. அவருடைய நாமம் உண்மையானது! தவறுகள் மற்றும் இருளின் அதிகாரத்தின் தாக்குதல்கள் இருந்தபோதிலும், தம்முடைய சபையை அழிக்க அவர் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. இவ்வுலகில் தேவனுடைய உண்மையான ஜனங்கள் இன்னும் இருக்கிறார்கள், எப்போதும் இருந்திருக்கிறார்கள். இருண்டயுகம் முழுவதிலும் பாவத்திற்கான நம்முடைய மீட்பரின் பலி என்ற மாபெரும் உண்மை என்பது இப்போதும் கர்த்தருடைய சில உண்மை பரிசுத்தவான்களால் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இருளும் தெளிவற்றதுமான அந்த காலங்களில்கூட இந்த விலைமதிப்பற்ற சத்தியம் ஒருபோதும் முற்றிலுமாக இழக்கப்பட்டுப் போய்விடவில்லை. மேலும் ஏற்ற சமயத்தில் அவருடைய சபையானது வனாந்திரத்திலிருந்து எடுக்கப்பட்டு, அவளுடைய நேசரின் கரத்தில் சாய்ந்திருப்பாள்''. உண்மையுள்ளவர்களுக்கும் கவனமுள்ளவர்களுக்கும் வெளிச்சமானது அதிகதிகமாய் இப்போதுவரை பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. பரிசுத்தவான்களுடைய பாதையில் எப்பேர்ப்பட்ட மகிமையின் வெள்ளம் தற்போது பிரகாசித்துக் கொண்டிருக்கிறது! ''தேவன் நம்மை அனுதினமும் நடத்தின வழிநடத்துதலின் பாதையைத் திரும்பிப் பார்க்கும்போது நாம் துதிக்கிறோம்''

கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்த தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு, தற்காலத்தின் உண்மையுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூடுதலான ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு தேவையில்லாமல் இருந்தது. ஆனாலும் அவர்களுடைய ஒவ்வொரு தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டது. ''சுத்திகரிக்கப்பட்ட ஆலயத்தின்'' காலங்களில் நாம் வசிக்கிறோம். சபை வரலாற்றிலேயே எக்காலத்திலுமில்லாத அதிகமான சத்தியம் தற்போது பெறுவதற்கான ஏற்றகாலமாயிருக்கிறது. உண்மையிலேயே, கர்த்தர் நம்மை தமது விருந்துசாலைக்கு கொண்டுவந்துள்ளார். ''நம்மீது பறந்த அவருடைய கொடி நேசமே'' – உன்னத 2:4.

பெரிய எதிரியாகிய சாத்தானும் அவனுடைய ஊழியர்களும், அவர்களில் பலர் அறியாமல் சேவை செய்கிறார்கள். நம் காலடியில் ஆயிரம் கண்ணிகள் வைத்தாலும் – ''அவர் நம் ஜீவனைக் காக்கிறார். நம் கால்களைத் தள்ளாடவொட்டார்''. நம் தேவன் நம்மைச் சுற்றிலும் ஒரு பாதுகாப்பு அரணாக இருந்திருக்காவிட்டால், வெகுகாலத்திற்கு முன்பே நாம் எதிராளியின் தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டிருப்பதை நம்மால் காணமுடியும்.

## அவருடைய பரிசுத்தவான்கள் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை

''நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது'' – சங்16:6. ஆனால் உண்மையுள்ளவர்கள் மாத்திரமே இவ்விதம் காக்கப்படுகிறார்கள். தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி செய்ய முறையான பிரயாசம் எடுக்காதவர்களை கர்த்தர் தக்கவைக்கிறார் என நாம் புரிந்துகொள்ளமுடியாது. இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறவர்கள், அவர்கள் நடக்க அவர் விரும்பும் வழியை உணர்ந்துகொள்ள முடிவதால், கர்த்தரைப் பிரியப்படுத்த தங்களால் இயன்ற அனைத்தையும் செய்கிறார்கள். அவர்கள் இன்று அவருடைய துதியின் சத்தத்தை கேட்கச்செய்கிறார்கள். போதுமான கிருபை அவர்களுடைய பங்காகிறது. விசுவாசம், அர்ப்பணிப்பு மற்றும் நம்பிக்கைக்கான பரீட்சைகளானது இதுவரை இல்லாத வகையில், பெரியளவில் இருந்தாலும், இந்த உண்மையுள்ளவர்கள் வீழ்ச்சியடைய மாட்டார்கள். ஒரு சேனை அவர்களுக்கு விரோதமாக பாளையமிறங்கினாலும், ஆயிரக்கணக்கானோர் அவர்கள் பக்கம் வீழ்ந்தாலும் அவர்கள் கால்கள் தள்ளாடுவதில்லை. ''இதோ பரிசுத்தவான்களின் பொறுமை மற்றும் விசுவாசம் இங்கு உள்ளது''. அவர்கள் அவரை காணமுடியாத இடத்திலும் பின்தொடர அவர்களுக்கு ஒரு காலம் தேவைப்பட்டாலும், அவர்கள் கர்த்தரிலும் அவருடைய வல்லமையின் சத்துவத்திலும் பலமுள்ளவர்களாயிருப்பார்கள்.

ஆதலால், இதுவரை நம்மை வழிநடத்தியவர் இனிமேலும் வழிநடத்துவார் என்பதை அறிந்து, நல்ல தைரியத்துடன் முன்னேறிச்செல்வோமாக. ஆரம்பத்தில் நமக்கு தயவு செய்தவர் இறுதியிலும் தயவுசெய்வார். ''நமக்கு எதிரானவர்களெல்லாரைவிட, நம் பட்சத்தில் இருப்பவர் பெரியவர்''. நாம் கீழே விழுந்துவிடாதபடி அவருடைய கிருபை நம்மை பாதுகாத்ததற்கும், இனிவரும் நாட்கள் எதைக் கொண்டுவந்தாலும், நம்மில் பலர் அசையாமல் முன்னேறிச்செல்வதற்காக இன்னும் ஒரே இருதயமும் ஒரே மனமும் கொண்டவர்களாக இருப்பதற்கும் தேவனுக்கே நன்றி உரித்தாகுக. அவைகள் நமக்கு கஷ்டத்தையும் உபத்திரவத்தையும் வேதனை மற்றும் பரீட்சையையும் கொண்டுவருமானால், அவருடைய கிருபை தொடர்ந்து நம்மைத் தாங்கும். விசுவாசம் மற்றும் சகிப்புத்தன்மைக்கான சோதனைகளை அவைகள் கொண்டுவருமானால், அவருடைய வாக்குத்தத்தங்கள் தோல்வியடையாது. நம்முடைய முழு நம்பிக்கையும் தேவனையே மையமாகக் கொண்டிருக்கட்டும். தொடர்ந்து அவரில் களிகூறுவோம். ''மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' – எரே 9:24.

உண்மையில்லாதவர்களைப் பிரித்தெடுக்கும் நோக்கத்திற்காக தேவனுடைய ஜனங்கள்மேல் சோதனைகளானது அனுமதிக்கப்படும். ஆகவே அவர் உண்மையுள்ளவர் என்பதை அறிந்து உறுதியாய் நிற்போமாக.

---------

R 5501

# கொள்கைஅடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம்

## CHRISTIAN LIBERTY BASED ON PRINCIPLE

சகோதரர்களாக சந்திக்கும் நம்முடைய அங்கீகாரம் ஆண்டவருடைய வார்த்தையாயிருக்கிறது என்பதை, நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது : "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறீர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்"(மத்18:20). இது கர்த்தருடைய ஜனங்களாக சந்திப்பதற்கான நம் சாசன உரிமையாக இருப்பதால், அவருடைய நாமத்தில் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் சந்திக்க தேர்ந்தெடுத்தாலும், இதன்கீழ் தேவனுடைய ஜனங்கள் அனைவருக்கும் சமமான உரிமை உள்ளதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். இக்கொள்கையை, வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டின்படி நாம் நினைவில் கொள்ளவேண்டும் : ஒரு தருணத்தில், பிரசங்கப் பிரயாணத்தை முடித்துவிட்டு 12 சீஷர்களும் திரும்பியிருந்தபோது, பரிசுத்த யோவான் இயேசுவிடம், "ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதபடியால் அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார்" (லூக்9:49,50). யோவானால் தடைசெய்யப்பட்ட அந்த நபர், சிலரிடத்தில் நன்கு தொடர்புகொண்டு, நாங்கள் சந்திக்காத நபர்களிடத்தில் தற்போது கூடுகையை ஏற்படுத்தியிருக்கிறார் என்றதற்கு, இயேசு என்னகூறினார் ? "அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" என்றார் – மாற்கு 9:38–40.

இதுபோன்ற விஷயங்களில் அவருடைய சித்தத்தைக்குறித்து, இன்றைய நாளில் ஜீவிக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு அறிவுறுத்த உதவும் வழிகாட்டியாக ஒரு பொதுவான கொள்கை இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. நம் ஏற்பாடுகள் கர்த்தருக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது என நிச்சயமாக நாம் நம்பலாம், இல்லையெனில், அவற்றை நாம் அவ்விதமாக அடைந்திருக்கமாட்டோம். மற்றவர்கள் வேறுபாடாக சிந்திப்பார்களானால், அந்த பொறுப்புணர்வு அவர்களிடத்திலும் கர்த்தரிடத்திலும் இருக்கிறது. அவர்களைத் தடைசெய்வது நமக்குரியதல்ல, மாறாக கர்த்தருடைய பணிநிர்வாகத்தில், அவருடைய ஞானத்தின்படி அவர்களை ஆசீர்வதிப்பதோ அல்லது ஆசீர்வதிக்காதிருப்பதோ அவருக்குரியது.

இக்கருத்தின்படி செயல்படுவது, கர்த்தருடைய ஜனங்களது கூடுகைகளை சிறுசிறு வகுப்புக்களாக உடைக்காதா என்று சிலர் கேட்கலாம்? இது சகோதரர்களையே சாந்திருக்கவேண்டும் என்று நாம் பதிலளிக்கிறோம். இருவராகவோ அல்லது மூவராகவோ அல்லது அதிக எண்ணிக்கையிலேயோ கூடுவதற்கு அவர்கள் உரிமை பெற்றிருக்கிறார்கள். பெரிய அளவிலான குழுக்களோடு ஐக்கியப்படுவது அவர்களுக்கு அனுகூலமளிக்குமென்று அவர்கள் கண்டார்களானால், அவ்வாறு செய்வதில் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நேரடியாகவும், அவருடைய அப்போஸ்தலர்கள் மூலமாகவும், இயேசுவின் போதனையின் ஆவி மற்றும் வார்த்தையின் வழிகளுக்குட்பட்டு, சபையில் மாபெரும் சுயாதீனத்தை இயக்குவதை இது பொருள்படுத்துகிறது.

ஒரு வகுப்பாக சகோதரர்கள் கலந்துகொள்ளும்போது, அவர்களின் தனிப்பட்ட சுயாதீனங்கள் மற்றும் சிலாக்கியங்கள் சிலவற்றை விட்டுவிடவும், அல்லது வெற்றிடமாக்கவும் வேண்டும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும். தனிப்பட்ட நபர்களுடைய விருப்பங்கள் ஏறக்குறைய சபையினுடைய விருப்பத்திற்கு உட்பட்டதாயிருக்கவேண்டும். பெரும்பான்மையானோர் சிறுபான்மையோரின் விருப்பங்களை கருத்தில் கொள்ளவேண்டும். கூடுமானவரை அனைவரையும் கலந்துகொள்ளச்செய்யவும், பிரியப்படுத்தவும், கூடுகைகளினுடைய தன்மை, கூடுகைகளுக்கான இடம், மற்றும் பேச்சாளர்கள் முதலியனவற்றை மிதமான வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஒருவரும் தன் சொந்த சுயநல விருப்பங்களையும், நலன்களையும் மட்டுமே கருத்தில் கொள்ளலாகாது. கூட்டுறவின்ஆவி, பொன்னான பிரமாணமாகிய அன்பின்ஆவியே மேலோங்கியிருக்கவேண்டும். இது உண்மையாயிருப்பதனால், எஜமானின் ஆவியால் நிரப்பப்பட்டு, அவரிடத்தில் நெருக்கமாய் ஜீவிப்போர் அனைவரும் முழு சபையின் நலன்களுக்காக, தனிப்பட்ட விருப்பங்களை வழங்குவதில் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவார்கள் .

### மனசாட்சி மதிக்கப்படவேண்டும்

பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கு

இணங்காத விஷயங்கள் மட்டுமே மனசாட்சியின் விஷயங்களாகும். மற்ற சகோதரர்கள் அனைவரும் சரி என்று எண்ணினாலும், பாவம், அநீதி, தவறு என்று ஒருவன் நம்புகிறவைகளை அவன் செய்வதில்லை. சபையில் மற்ற சகோதரர்களால் வழிநடத்தப்பட்டாலும், ஒருவரது மனசாட்சி என்ன கட்டளையிடுகிறதோ அதை செய்யாமல் யாரும் விடுவதில்லை.

மனசாட்சி எப்பொழுதும் மதிக்கப்படவேண்டும். ஒருபோதும்அதை மீறப்படவோ அல்லது நெரிக்கப்படவோ கூடாது. மற்ற சகோதரர்களுடைய மனசாட்சிகளின் கண்ணோட்டம் அந்த விஷயத்தில் வேறுபட்டிருந்தாலும், தன் மனசாட்சிக்கு உண்மையாய் நிலைநிற்கிற எந்த ஒருவரையும் அவர்கள் அவமதிப்புக்குள்ளாக்கக்கூடாது. அதற்கு மாறாக, அவனுடைய மெய்ம்மையில் பற்றுறுதிகொண்டு தைரியமாய் நிற்பவனை மதிக்கத்தக்கவராக எண்ண வேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்தில் இந்த கொள்கைகளின் அடிப்படையில் சுயாதீனம் தொடர்ந்து பராமரிக்கப்படலாம். ஒரே சிந்தையுடையவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவதன் விகிதாச்சாரத்திற்கேற்ப, நாம் ஆசீர்வாதத்தைக் கண்டடையலாம். ஐக்கியம் காக்கப்படாதபோது, கூடுகையானது தெய்வீக ஏற்பாட்டுக்கு இணக்கமில்லாமலும், அல்லது விரும்பத்தகாததாகவும் இருக்கும். ஆனால் வெவ்வேறு வகுப்புகளில் கூடுவது அநுகூலமளிக்குமென்று சகோதரர்கள் கண்டால், நாம்நம்புகிறபடியும் வழக்கமாக காண்கிறபடியும் முதலில் தனிப்பட்ட சுயாதீனத்தின் கட்டுப்பாடு என்பது மிகப் பெரியதாக செயல்படுத்தப்பட்டதோடுகூட, சிறுபான்மையினராக உள்ள சகோதரர்களின் உணர்வுகளை பெரும்பான்மையினர் அலட்சியப்படுத்தினதையும் கண்டோம்.

ஆனால் ஒரே பட்டணத்தில் கர்த்தருடைய ஜனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கூடுகைகள் அவசியம் என்றோ, அல்லது விரும்பத்தக்கது என்றோ கண்டால், அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட தலையின் கீழாக ஒரே சகோதரத்துவமாயிருந்து, ஒரே இருதயத்தையும், ஒரே சிந்தையையும் பெற்றிருக்கவேண்டியது இன்னும் நிச்சயமான உண்மையாயுள்ளது. அவர்கள், ஒருவர் மற்றவருடைய நலன்களை கவனித்து, அன்புசெய்வதற்கும் நற்கிரியைகளுக்கும் ஒருவரையொருவர் ஏவப்படும்படிக்கு, தங்கள் எல்லா வல்லமையையும் பிரயோகிக்கவேண்டும்.

———————

**R 5503**

# கனி கொடாத அத்திமரம் - தீட்டுப்படுத்தப்பட்ட ஆலயம்

## BARREN FIG TREE - DEFILED TEMPLE

ஆதார வசனங்கள் : மாற்கு 11:12–25

திறவுகோல் வசனம் : மத்தேயு 7:20 “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்”

இயேசுவின் வெற்றிப் பிரவேசமானது எருசலேமுக்குள் நடந்து முடிந்த ஒரு சம்பவமாயிருந்தது. பரிசுத்த நகரத்தில் ஒரு நாளின் ஒருபகுதியை செலவழித்தபிறகு, ஒரு புறநகர்ப்பகுதியாக மாத்திரம் இருந்த பெத்தானியாவுக்கு இயேசு திரும்பினார். மறுநாள் காலையில் இயேசு மீண்டும் நகரத்துக்குச் சென்றபோது, வழியோரத்தில் ஏராளமான இலைகளைத் தாங்கியிருந்த அத்திமரமொன்றைக் கண்டார். அதில் அத்திப் பழங்கள் ஏதாகிலும் அகப்படுமா என்று பார்ப்பதற்காய் அதனிடமாக வந்தார். ஆனால் ஒன்றும் காணப்படவில்லை. அடர்ந்த இலைகளின் நல்ல தோற்றமோ ஏமாற்றமளித்தது. இதனால் இயேசு, அம்மரம் ஒருக்காலும் கனிகொடாது அல்லது முதிர்ச்சியடையாது என்று கூறி, மரத்தின்மீது ஒரு தடையை, ஒரு சாபத்தை, ஒரு பட்டுப்போகும் தாக்கத்தை விதித்தார். இது எதனை அர்த்தப்படுத்தியது? நிச்சயமாக இது, இயேசுவின் பின்னடியார்கள் கனிகொடாத ஒவ்வொரு மரத்தையாவது பலன்கொடாத வயல்நிலத்தையாவது சபிக்கவேண்டும் என்பதற்கான ஒரு தகவலை இருக்கவில்லை! இதில் மேலோட்டமாகத் தெரியாத, மிகவும் ஆழமான ஏதோவொரு பாடம் இருந்திருக்கவேண்டும்.

கவனமாகக் குறிக்கப்பட்டுள்ள இந்த சம்பவத்தின் ஆழமான அர்த்தத்தை வேத மாணாக்கர்கள் இப்போது புரிந்துகொள்வதாக நம்புகிறார்கள். அந்தஅத்திமரம் யூத தேசத்திற்கான ஒரு நிழலாக அல்லது ஒரு உருவப் படமாகப் பயன்படுத்தப்பட்டதாக அவர்கள் நம்புகிறார்கள். மேலும் அந்தமரத்தின் கனிகொடாத தன்மையினிமித்தம் அதன்மீது ஏற்பட்ட ஒரு பட்டுப்போகும் தாக்கமானது யூத தேசத்தின் கனிகொடாத தன்மையினிமித்தம் அதன்மீது ஒரு நாளைக்கு முன்பு தீர்ப்பிடப்பட்ட பட்டுப்போகும் தாக்கத்துடன் துல்லியமாக ஒத்திருந்தது என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

இதற்கு முந்தைய தினத்தில்தான், இயேசு யூத தேசத்திடம், “அந்த நாள்வரை என்னைக் காணாதிருப்பீர்கள்” என்று கூறியிருந்தார். ஆக, அவர் இம்மரமானது அயோன்(aion) அல்லது யுகத்தின் இறுதிவரை பட்டுப்போயிருக்கவேண்டுமென அறிவித்திருந்தார்.

மீண்டும் இந்த யுகத்தின் முடிவைக் குறித்து இயேசு தம் சீஷர்களிடம் பேசும்போது, "அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள்". அதாவது, குளிர்காலத்தில் இஸ்ரயேல் தேசத்தின் மற்றும் உலகத்தின் பட்டுப்போயிருக்கும் நிலை முடிவுற இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், யூதர்களிடையே ஜீவனுக்கான அறிகுறிகள், நம்பிக்கை, வாக்குத்தத்தம் ஆகியவை துளிர்விடுவது ஒரு புதிய யுகத்தின் அடையாளங்களில் ஒன்றாக இருக்கும்.

### யூத தாயக இயக்கத்தின் முக்கியத்துவம் (Importance of Zionism)

இதே வேத மாணவர்கள், குறிப்பாக சீயோன் இயக்கத்தால் வெளிப்படுத்தப்பட்டபடி, யூத ஜனங்களிடையே மீண்டும் நம்பிக்கை மறுமலர்ச்சியடைவதை இப்போது சுட்டிக்காண்பிக்கின்றனர். யூதர்களுடைய தேசம் மற்றும் கடந்தகால தெய்வீக வாக்குத்தத்தங்களைக் குறித்த இந்த நம்பிக்கையும் விசுவாசமும் திரும்பிக்கொண்டிருத்தலானது, தீர்க்கதரிசனத்திற்கு ஏற்றவாறு துல்லியமாக ஏற்றவேளையில் நடக்கின்றது என்று சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. அவர்கள் ஏசாயா 40ம் அதிகாரத்தை தற்போது நிறைவேறிவருவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர். "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக்கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்".

ஒன்றுசேர்ந்து வந்த எலும்புகள் மேல் மாம்சம் உண்டாகி, இறுதியில் ஜீவ சுவாசத்தைப் பெற்றுக்கொண்ட உலந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு குறித்த எசேக்கியேலின் தீர்க்கதரிசனமானது, யூதர்களைப் பற்றின ஓர் உருவகமாய் இருக்கிறதென்று இதே வேத மாணவர்கள் கூறுகிறார்கள். அது சொல்லர்த்தமான உயிர்த்தெழுதலைக் குறிக்கவில்லை, மாறாக, அது தெய்வீக வாக்குத்தத்தங்கள் மீதான இஸ்ரயேலருடைய நம்பிக்கையின் மறுமலர்ச்சியைக் குறிக்கின்றது என்று அவர்கள் நம்புகிறார்கள். "இந்த எலும்புகள் இஸ்ரயேல் வம்சத்தார் அனைவருமே; இதோ, அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம் என்கிறார்கள்" எனும் தீர்க்கதரிசியின் அறிவிப்புக்கு இது ஒத்துப்போகின்றது – எசேக்கியேல் 37:11.

யூத தேசம் ஆகாருடைய குமாரனாகிய இஸ்மயேலால் நிழலான ரீதியில் குறிப்பிடப்படுகிறது என பரிசுத்த பவுல் போதிப்பதாக இதே வேத மாணவர்கள் தெரிவிக்கிறார்கள்(கலாத் 4:22–31). எப்படி ஆகாரும் அவளுடைய குமாரனும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் புறம்பாக்கப்பட்டிருந்தார்களோ, அதுபோல, நியாயப்பிரமாண உடன்படிக்கையும், யூதர்களும் தெய்வீக தயவிலிருந்து ஒரு குறிப்பிட்டகாலத்துக்கு மாத்திரமே துண்டிக்கப்பட்டனர். இஸ்மயேல் வனாந்தரத்தில் தாகத்தினிமித்தம் கிட்டத்தட்ட மயக்கத்துக்குள்ளாகியிருந்து, பின்னர் நீரூற்றொன்றைச் சுட்டிக்காட்டிய கர்த்தருடைய தூதனால் புத்துயிர்பெற்றார். இதுவும் முன்னடையாளமானதே. தேவனுடைய தயவைப்பற்றின யூதருடைய நம்பிக்கைகள் கிட்டத்தட்ட மரித்துப்போயிருந்தன. சீயோனிசம் அவர்களுக்கு புத்துயிர் ஊட்டுகின்ற நீரூற்றாக இருந்து, ஒரு ஜனங்களாக மரணத்திலிருந்து அவர்களை மீட்டெடுத்து வருகிறது. ஆவிக்குரிய தளத்தில் விரைவில் நிறுவப்படவுள்ள மேசியாவினுடைய இராஜ்யத்தின் கீழ், யூதர்கள் பூமிக்குரிய தளத்தில் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள்.

எந்தவொரு தனிப்பட்ட பொறுப்புணர்வையோ, பதில் சொல்ல வேண்டிய நிலையினையோ பெற்றிராத ஓர் உயிரற்ற பொருளுக்கு எதிராக இயேசு ஏன் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்கான காரணத்தைக் காட்டுகிற இந்த பாடத்தின் உண்மைகளுக்குப் பொருந்திவருகிற, வேறெந்த விளக்கமும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.

### ஆலயத்தைச் சுத்திகரித்தல்

அத்தி மர சம்பவத்திற்குப் பிறகு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் எருசலேமுக்கு வந்தவுடன், நேரடியாக தேவாலயத்திற்குள் பிரவேசித்தனர். அங்கு, முன்பு தாம் செய்ததற்கு மாறாக, இயேசு அதிகாரத்தினை எடுத்து, முன்னறிவிப்பின்றி வியாபாரிகளைத் துரத்தவும், காசுக்காரருடைய பலகைகளையும், தேவாலயத்தில் பலியிட விரும்பும் ஜனங்களுக்கு புறா விற்றவர்களது கடைகளையும் கவிழ்த்துப்போட்டார். அதே சம்பவத்தின் மற்றொரு பதிவானது, இந்த ஆலயத்தைச் சுத்திகரிப்பதில் இயேசு கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, வியாபாரிகளைத் துரத்திவிட்டதாகத் தெரிவிக்கின்றது. அவர் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோவதற்குக் கூட அனுமதிக்கவில்லை என்பதை இப்பாடமானது நமக்குச் சொல்கின்றது. இவை அனைத்தும் பினவரும் இரண்டு முக்கியத்துவத்தை உடையவையாய் உள்ளன.

1) முதன்மையாக, இது அந்தக் காலத்துடன் தொடர்புடையதாக இருந்தது

2. இரண்டாவதாக, இது நம்முடைய நாட்களில் ஏற்பட வேண்டிய நிஜமான ஆலயத்தின் சுத்திகரித்தலுக்கு ஒரு நிழலாக இருந்தது என்று நாங்கள் நம்புகிறோம்.

நமது நாளின் சட்டப்பூர்வ பயன்பாடுகளின்படி பார்க்கையில், ஆலய கட்டிடத்திற்குச் சொந்தக்காரர்களான சபையாரால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையிலோ அல்லது மனசாட்சியின் எந்தவொரு உரிமையிலோ தலையிட, எந்தவொரு சபையின் கட்டிடத்திற்குள்ளோ ஆலயத்திற்குள்ளோ எவரேனும் நுழைவதென்பது மிகவும் முறையற்றதாக இருக்கும். ஒருவேளை தவறு ஏதேனும் நடந்திருந்து, அதை ஒருவர் திருத்தவேண்டுமென விரும்பினால், ஓர் ஆணை பிறப்பிப்பதற்காக ஒரு நீதிபதியிடம் முறையிட்டுப்பெறுவதோ அல்லது ஒரு காவலரை அழைத்து, சட்டத்தின் மீறலைக் கவனிக்கச்செய்து, காரியங்களைச் சரிசெய்யுமாறு கேட்டுக்கொள்வதோ, அந்நபர் எடுக்கவேண்டிய நடவடிக்கையாக இருக்கும். ஆனால் யூதருடைய நியாயப்பிரமாணத்தின்கீழோ அது வேறுபட்டதாயிருந்தது. ஒவ்வொரு யூதரும் தேவதூஷணம் அல்லது எந்தப் பரிசுத்தக் குலைச்சல் குறித்து தெய்வீகப்பிரமாணத்தை செயல்படுத்தும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தனர். தேவதூஷணம் செய்ததற்காக, பெற்றோர்கள் தங்களுடைய சொந்த பிள்ளைகளைக்கூட கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்றும் நியாயப்பிரமாணம் வலியுறுத்துகிறது(லேவி 24:10–16).

ஆகவே, கர்த்தருடைய ஆலயத்தை அசுத்தப்படுத்தி, அதன் புனிதத்தன்மையை கெடுப்பவர்களின் வியாபார சாதனங்களைக் கவிழ்ப்பதில் எந்தவொரு யூதருக்கும் என்ன உரிமை இருந்ததோ, அதையே இயேசுவும் செய்தார். அவர்களுடைய வேதபாரகர்களும் பரிசேயர்களும் இயேசுவுக்கு எதிரான சில சந்தர்ப்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு வகைதேடினாலும், இங்கு விவரிக்கப்பட்டுள்ள தன்னிச்சையான நடவடிக்கைக்கு அவர்கள் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இயேசு தம்முடைய உரிமைகளுக்குள்ளாகவே இருந்தார். அவர், தேவன் மற்றும் அவருடைய ஆலயத்தின் காரணத்திற்காகவும், கனத்திற்காகவும் போராடிக்கொண்டிருந்தார். அவ்வாறு செய்ய அவருக்கு எல்லா உரிமையும் இருந்தது.

### ‘‘அதைக் கள்வர் குகையாக்கினீர்கள்’’

அங்கு நிலவின அந்த நிலைமைக்கான குற்றப்பொறுப்பு அதிகாரத்திலிருந்த வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள்மீதே சாருமென்பதை, ‘‘நீங்கள் அதைக் கள்வர் குகையாக்கினீர்கள்’’ என்று கூறியதில் இயேசு அறிவுறுத்தினார். அவர்கள், ஏமாற்றுதல் அல்லது சட்டவிரோதமான வருமானத்திற்காகவும் பிற பரிசீலனைகளுக்காகவும், குறிப்பாக தேவனுடைய வீட்டை வியாபாரப் பொருட்களின் இடமாக மாற்றவும் அனுமதித்திருந்தனர். மேலும் இந்த தேவாலயமானது பெரியஅளவில் பண்டமாற்று இடமாக அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்ததாக சிலரால் வலியுறுத்தப்படுகிறது. இப்படி ஜெபம் செய்வதற்காக ஆலயத்துக்கு வந்திருந்த, நெருக்கத்திலிருக்கும் ஜனங்களைச் சந்திப்பதற்கு, அநியாய வட்டிக்காரர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இப்படிப்பட்டவர்களே, பாசாங்காக நீண்டஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறவர்கள் என்று இயேசுவால் குறிப்பிடப்பட்டனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தம்முடைய நாளில் சிலர் அனுகூலங்களைப் பெறுவதற்காகவும், பணத்தின் பலன்களை அறுவடை செய்வதற்காகவும், தங்கள் மதத்தினை ஒரு போர்வையாகப் போர்த்திக்கொண்டிருந்தனர் அல்லது மதத்தின் பெயரால் பாசாங்கு செய்துகொண்டிருந்ததாக இயேசு நியாயந்தீர்த்திருந்தார். இப்படியாக ஆலயமானது ‘‘கள்வர் குகையாக’’ மாறியிருந்தது.

தற்காலத்தில் பலரிடம் காணப்படுவதைப் போலவே, பழங்காலங்களில், களவு என்ற வார்த்தையுடன் ஒரு நேரடி அர்த்தமே இணைந்திருந்தது. அதுவும் அவ்வார்த்தையினுடைய முழு அர்த்தத்தின் ஒரு பகுதியை மாத்திரமே உள்ளடக்கினதாய் இருந்தது. அநியாய வட்டிக்காரர்கள் ஆலயத்தில் பெருமளவில் பரவியிருந்து, கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு அனுதாபம் காட்டுவதாக நடித்து, கடுமையான நிபந்தனைகளின்பேரில் பணத்தைக் கடனாகக் கொடுத்தனர். இது இறுதியில், விதவை மற்றும் அநாதைகளின் சொத்துக்களைச் சட்டப்பூர்வமாக அபகரிக்கச்செய்தது. இன்றும் அது உண்மையாக இருக்கின்றதோவென நாம் அஞ்சுகிறோம். அதாவது, சுயநலத்தை மறைக்கும் ஒரு போர்வையாக மதம் இன்னும் பயன்படுத்தப்படுகிறதோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். சொல்லர்த்தமான களவுசெய்தல், கொள்ளையிடுதல் போன்றவை குறித்து சிந்திக்காத மக்கள், சிதைந்துபோன மனசாட்சியின் வாதங்களுக்கு அடிக்கடி அடிபணிந்துவிடுகிறார்கள். குறிப்பாக, அநாதி தேவனுடைய வீட்டைத் தவறாகப் பயன்படுத்துவதில் கோபமடைந்த எஜமானர், இன்றும்கூட அதே உணர்வுகளைக் கொண்டிருக்கிறார். எவரேனும் மதத்தை மாய்மாலமாகப் பயன்படுத்திக்கொண்டே, தாங்கள் அவருடைய பின்னடியார்கள், அவருடைய சீஷர்கள், அவருடைய

சிநேகிதர்கள், கிறிஸ்துவின் மெய்த்திருச்சபையின் அங்கத்தினர் என்று உரிமை கொண்டாடினால், அது விருதாவாயிருக்கும்.

### “ஜெபவீடு”

கர்த்தராகிய இயேசு அடிக்கடி ஜெபம்பண்ணுவதற்காக மலைக்குச் சென்றபோதும், அல்லது கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்தபோதும், பரிசேயர்கள் சில சமயங்களில் வீதிகளின் சந்திகளில் ஜெபித்தபோதும், பரிசுத்த பேதுரு ஜெபிக்க மேல்வீட்டிற்குச் சென்றபோதும், ஆலயமே ஜெபவீடாக எல்லா யூதர்களாலும், விசேஷமான வகையில் அங்கீகரிக்கப்பட்டது. அவ்வாறே பரிசுத்த பேதுருவும் பரிசுத்த யோவானும் ஜெபிப்பதற்காக தேவாலயத்திற்குப் போனார்களென நாம் வாசிக்கிறோம்(அப் 3:1). இந்த ஓர் இடமே, உலகிலுள்ள மற்றெல்லா இடங்களைக் காட்டிலும், தேவனிடம் நெருங்கி வருவதை ஓர் ஆத்துமாவால் உணரக்கூடிய விசேஷமான இடமாக இருந்தது. மகா பரிசுத்த ஸ்தலத்தில் இது தெய்வீகப் பிரசன்னத்தைக் குறிக்கும் ஷெகின்னா ஒளி தங்கியிருந்த கிருபாசனமாக இருந்தது.

அந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு மிக அருகாமையில் செல்ல யாரால் முடிந்ததோ, அந்தளவுக்கு அவர் தேவனுடன் ஐக்கியத்தில் இருப்பதாக புரிந்துகொள்ளப்பட்டது. இவ்வாறு ஆசாரியர்கள் மாத்திரமே பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பிரவேசிக்கக்கூடியவர்களாக இருந்தனர். ஏனைய இஸ்ரயேல் தேசத்தார் பிரகாரத்தைத் தாண்டி, முன்செல்ல அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பிரகாரங்களிலேயே மூன்று பிரிவுகளிருந்தன – முதலாவது, யூதர்களுக்கானது; இரண்டாவது யூத ஸ்திரீகளுக்கானது; மற்றும் மூன்றாவது, ஒரு வெளிப்புற பிரகாரமாக இருந்தது – அங்கு புறஜாதி விசுவாசிகள் மெய் தேவனைத் தொழுதுகொள்ளமுடியும் என்றாலும், பரிசுத்த பவுல் அறிவித்தபடி, “பிரிவினையாகிய நடுச்சுவரால்” பிரிக்கப்பட்டிருந்தார்கள்(எபேசி2:14). இந்தப் பிரகாரங்கள் தேவனுடைய தயவை அணுகுவதற்கான வெவ்வேறு அளவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தின. இன்னும் நிறைவுபெறாத நிஜத்தில், கிறிஸ்துவும் அவருடைய திருச்சபையும் முறையான ஆலயமாக இருப்பார்கள்; தேவனை அணுகவிரும்பும் சகல மனிதர்களும் தேவனுடைய ஆலயமாகிய கிறிஸ்துவின் மூலமே(தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து) அணுகுவார்கள். மேலும் அவர்கள் எந்தளவுக்கு நெருங்கி வருகிறார்களோ, அந்தளவுக்கு அவர்களுடைய ஆசீர்வாதமும் அதிகமாய் இருக்கும்.

இந்த நிஜமான ஆலயத்தைப் பற்றி பரிசுத்த பேதுரு மற்றும் பரிசுத்த பவுல் இருவருமே நம்மிடம் கூறுகிறார்கள்: “உங்கள் சரீரமானது .. பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்று அறியீர்களா ?”(1கொரிந் 6:19). “தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்”(1கொரிந்3:17). பல ஆண்டுகளாக பரிசுத்த ஆவியின் கனிகளிலும் கிருபைகளிலும் அபிவிருத்தியடைந்து வருகிற திருச்சபையானது, “கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது” (எபேசி2:21). “ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் .. கட்டப்பட்டுவருகிறீர்கள்”(1பேது2:5). “நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டு வருகிறீர்கள்”– “அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்”– எபி2:20–22.

இந்த நிஜமான ஆலயம் நான்கு வெவ்வேறு தரநிலைகளிலிருந்து கண்ணோக்கப்படமுடியும். மேற்கோள் காண்பிக்கப்பட்ட கடைசி வசனத்துக்கு இசைவாக சொல்லவேண்டுமெனில், அது இன்னும் கட்டப்பட்டு வருகின்றதாயுள்ளது. கிறிஸ்துவைத் தலையாகக்கொண்ட மகிமையான ஆலயத்திலுள்ள இடங்களுக்காக, ஜீவனுள்ள கற்கள் உலகத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டு வருகின்றன. அந்த ஆலயம் ஆவிக்குரியதாயும், மனுஷரால் காணப்படாததாயும் இருக்கும். அதின் ஒவ்வொரு அங்கத்தினரும், தேவதூதர்களுக்கு மேலாக, மகிமையடைந்த இயேசுவைப் போலிருப்பார்கள்.

அந்த ஆலயத்தில் தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியினால், மிகவும் முழுமையான அளவில் வாசம்பண்ணுவார். அதன்மூலம் ஆயிரமாண்டு யுகத்தின்போது, முழு மனுக்குலமும் தேவனிடம் நெருங்கி வருவதற்கும், திவ்ய தயவுகளைப் பெறுவதற்கும் பாவம் மற்றும் மரணத்திலிருந்து தூக்கி எழுப்பப்பட்டு – ஏதேனில் இழந்துபோய், கல்வாரியில் அனைவரையும் மீட்டெடுத்து, மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியின்போது அனைவருக்கும் வழங்கப்படவிருக்கிறதான –ஆதி தேவ சாயலுக்கும், ரூபத்திற்கும் மீண்டும் திரும்புவதற்குமான சிலாக்கியத்தைப் பெற்றிருப்பார்கள். அப்போது வார்த்தையின் மாபெரும் அர்த்தத்தின்படி, அது தேவனுடைய பரிசுத்த ஸ்தலமாக இருக்கும். தீட்டுப்படுத்தும் எதுவும் அதில் கொண்டுவரப்படுவதில்லை. அனைத்து வணிகமும், பணப்பரிமாற்றமும் அதற்குத் தூரமாயிருக்கும். அது ஜெபவீடாகவும், ஜெபத்தின் வாய்க்காலாகவும், பாவ

மன்னிப்புக்காக தேவனிடம் நெருங்கி வருவதற்கும், கிறிஸ்துவில் தேவன் அருளியுள்ள அனைத்து ஆசீர்வாதங்களையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்ள மனதாயிருக்கும் யாவரும் பெற்றுக்கொள்வதற்கும், மனுக்குலம் அணுகுகிற ஒரு வழியாகவும் இருக்கும்.

எருசலேம் ஆலயமானது, அந்த மகிமை நிறைந்த பரிபூரண ஆலயத்தின் ஒரு நிழலாக இருந்த காரணத்தினால், அதில் செய்யப்படும் அனைத்து வகையான வியாபாரமும், பரிசுத்தக்குலைச்சலாக இருந்தன– அந்த நிழலின் அழகிய பரிபூரணத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தன. என்ன நோக்கத்திற்காக தேவன் அதைக் கொடுத்திருந்தாரோ, அந்த உண்மைத்தன்மையையும், வருங்காலத்தையும் தவறாக சித்தரித்துக் கொண்டிருந்தன.

### உங்கள் சரீரமானது ஆலயமாயிருக்கிறது

ஆனால் இப்போது இந்தப் பாடத்தைப் பற்றி, மேற்கூறியவற்றுடன் முரண்படாத, ஆனால் உறுதிப்படுத்துகிற இன்னும் ஒரு வித்தியாசமான பார்வையைப் பார்க்கலாம். எதிர்காலத்தில் திருச்சபையானது தேவனுடைய ஆலயமாக, பரலோக தளத்தில் பரிபூரணமடைந்திருக்குமென்பதால், ஒரு புதிய சிருஷ்டியாக பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்துவினுடைய திருச்சபையின் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினரும், அந்த அளவுக்குத் தன்னுடைய மரணத்திற்கேதுவான மாம்சீக சரீரத்தில் தேவன் வாசஞ்செய்ய பெற்றிருக்க வேண்டியதாயிருக்கின்றது. உலகின் ஜனங்கள், பொதுவாக எவ்வளவுதான் நல்லவர்களாகவோ ஒழுக்கமுள்ளவர்களாகவோ இரக்கமுள்ளவர்களாகவோ தாராளமுள்ளவர்களாகவோ இருந்தாலும், அவர்கள் பரிசுத்தஆவியின் ஆலயங்களாக இருக்கமுடியாது.

பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் வரையில், யாரும் பரிசுத்தஆவியின் ஆலயமாக மாறமுடியாது. சித்தம், சிந்தை மாத்திரம் மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டு, சரீரம் இன்னும் அபூரண மாம்ச சரீரமாக இருந்தாலும்கூட, அந்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் அவரை ஒரு புதிய சிருஷ்டியாகவும், தேவனுடைய ஒரு குமாரனாகவும் உருவாக்கிவிடுகின்றது. பழைய சரீரத்தில் வாசஞ்செய்து, அதனைப் பயன்படுத்தும் புதிய சிந்தையானது, அதுமுதற்கொண்டு அந்தப் பழைய சரீரத்தைத் தேவனுடைய ஆலயமாக அமைத்து, முன்பு இல்லாத ஒரு பரிசுத்தத்தை அல்லது புனிதத்தை அச்சரீரத்துக்கு அளிக்கின்றது.

இப்போது புதிய சிருஷ்டியானது இந்த மரணத்துக்குரிய சரீரத்தில் வசிப்பதாலும், பாவம் மற்றும் சீரழிவு மூலம் அது சேதப்படுத்தப்பட்டு, மகிமையற்றதாக இருப்பதாலும், அது ஓர் ஆலயமென்பதற்குப் பதிலாக, ஓர் ஆசரிப்புக்கூடாரமாகப் பேசப்பட்டுள்ளது. இதுதவிர, கூடாரம் என்கிற வார்த்தையானது, நிரந்தரமும் நித்தியமுமில்லாத தற்காலிகமான ஒன்றைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நமது பரலோக வீடாகிய நமது ஆவிக்குரிய சரீரமே ஆலயமாக இருக்கும். ஆனால் இயேசு கூறியதுபோல, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடையாமல், எவராலும் அந்தப் பரிபூரண ஆலய நிலைமைக்குள் பிரவேசிக்கமுடியாது. “முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன்பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்” – வெளிப்படுத்தல் 20:6.

ஒரு புதிய இருதயமாக இருந்தாலும், அல்லது பணிவு, ஒழுக்கம் போன்றவற்றைக் கற்றுக்கொண்ட வெறும் சுபாவ மனுஷனுடைய அல்லது மனுஷியுடைய இருதயமாக இருந்தாலும், இருதய குணத்தை யாராலும் அறியமுடியாது. வெளிப்புற கனிகளால் மாத்திரமே நாம் ஒருவரையொருவர் நிதானிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய ஆவி ஒருவருக்குள் வாசம்பண்ணுமானால், கனிகள் நல்லவையாயும், மற்றவர்களுக்கு உதவிகரமானதாயும் இருக்கும். அந்த மனிதர், இயேசுவைப்போல, அவருடைய குணமும், நன்மையும் மற்றவர்களால் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டாலும் அங்கீகரிக்கப்படாவிட்டாலும், அவருடைய வீட்டிலும், அவருடைய சமுதாயத்திலும் ஒரு ஆசீர்வாதமாக இருப்பார். இந்த தேவஜனங்களின் கனிகள்– பரிசுத்தம், சாந்தம், தயவு, நீடிய பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் பிறரது நலனுக்காகவும், விசேஷமாக தேவனுக்கும் அவருடைய சத்தியத்துக்கும் ஊழியம் புரிவதற்காகவும் தன்னையே பலிசெலுத்துதல் போன்றவையாக இருக்கும்.

––––––

R 5506

## வழியும், சத்தியமும், ஜீவனும்

## THE WAY, THE TRUTH, THE LIFE

ஆதார வசனங்கள் : யோவான் 8:31–32

“...நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்”

நமது கர்த்தர் தம்முடைய முதல் வருகையின்போது, அப்போது தேவனுடனான உடன்படிக்கையின் உறவுக்குள் வீட்டின் ஊழியக்காரர்களாக இருந்த யூத தேசத்திற்கு வந்தார். தேவ புத்திரர்களாகும்படியான முதலாவது

சிலாக்கியம் இவர்களுக்கு வழங்கிட வேண்டும். மேலும் எந்தளவுக்கு அவர்கள் பெற்ற ஒளிக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பார்களோ, அந்தளவுக்கு அவர்களுடைய ஆசீர்வாதமும் வந்தடைந்திருக்கும். இருப்பினும் அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக மாறும் முன்பு, இயேசு அவர்களின் மீட்பராக இருந்து, அக்கிரமத்துக்கு பரிகாரம் செய்து, அதன்மூலம் வழியைத் திறப்பது அவசியமாயிருந்தது. இதைச் செய்யவே அவர் வந்திருந்தார். ஆனால் இன்னும் அதை செய்திருக்கவில்லை. யாரெல்லாம் தெய்வீக நோக்கங்களையும் ஏற்பாடுகளையும் புரிந்துகொண்டு அவற்றிற்கு இசைவாக செயல்படுகிறார்களோ, அவர்கள் யூதர்களாக அவர்கள்மீது சுமத்தப்பட்ட ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து – அதாவது மாம்சீக பலவீனங்களின் விளைவுகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனோடுகூட முழு உடன்பாட்டிற்கு கொண்டுவரப்படவேண்டும்.

இந்த பெரிய சிலாக்கியமானது எல்லாவற்றைக்காட்டிலும் மேலான ஒன்றைக் குறிக்கிறதை நம்மால் காணமுடிகிறது. அதாவது, மேசியாவுடன் உடன் சுதந்திரராகும் இன்னும் மேலான ஒன்றைக் குறிக்கிறது. ஆனால் இன்னும் மறைக்கப்பட்ட இரகசியமாகவே இவையனைத்தும் இருந்தன.அவைகள் அந்நேரம்வரைக்கும் நம்முடைய கர்த்தரால் மட்டுமே அறியப்பட்டிருந்தது. ஏனெனில் அவர் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதினால் அவருக்கு அவைகள் தெளிவாக்கப்பட்டன. அநேக விஷயங்கள் புரிந்துகொள்வதற்கு கடினமானவைகளாக இருந்தன. இயேசு உவமைகளினாலும் மறைபொருள்களினாலும் பேசினார். ஏனெனில் ஜீவனுக்கான வழியானது ஏற்படுத்தப்பட்டு, அதைத்தொடர்ந்து நெருக்கமான வழியும் திறக்கப்பட்டதே அதின் நோக்கமாகும். மேலும் நாம் வேதத்தில் வாசிக்கிறபடி, கர்த்தருடைய வார்த்தைகளுக்கு சிலர்,“இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்” “யார் இதை நம்பக்கூடும் ?” என்றார்கள்.

கடினமான உபதேசம் என்பது, குறிப்பிட்டு சொல்லவேண்டுமெனில், அவருடைய “மாம்சம் உண்மையில் அப்பமாகவும் அவருடைய இரத்தம் உண்மையில் பானமாகவும் இருக்கிறது”, மற்றும் இவற்றைப் புசித்துக் குடிப்பதன்மூலம் அவர்கள் நித்திய ஜீவனைப் பெறமுடியும் என்பதே ஆகும். இதற்குப்பிறகு அநேகர் அவரை விட்டுவிலகி, அவருடைய சீஷர்களாகும் எண்ணத்தை கைவிட்டனர். அதினால் அவர்கள் தங்களின் சொந்த ஆர்வங்களினாலேயே குருடாக்கப்பட்டனர் என வாசிக்கிறோம். பொறுமையாக பின்பற்றுவதற்கு பதிலாக, “இதெல்லாம் முட்டள்தனம்! எங்களுக்கு இது புரியவில்லை” என்றனர்.

இயேசு இவ்வார்த்தைகளை அவர்களிடம் சொன்னபோது, இந்நிலைமையை அவர் எதிர்பார்த்து இருந்தார். அவர் அவர்களை விழிப்பாயிருக்கும்படி எச்சரிப்பூட்டினார். “இந்த மனிதனைப்போல் எவரும் பேசினதில்லை” என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள் என கூறுவதுபோல் இது இருந்தது. வேதபாரகர் மற்றும் பரிசேயருடைய வார்த்தைகளிலிருந்து ஏற்கனவே நீங்கள் மிகவும் வித்தியாசமான வார்த்தைகளை கேட்டிருக்கிறீர்கள். இன்னும் கொஞ்சகாலம் பொறுமையாயிருந்து அதிலேயே தொடருங்கள். இவ்வாறு செய்வீர்களானால் ஏற்ற காலத்தில் நிலைமையை நீங்கள் கிரகித்துக்கொள்வீர்கள். விசுவாசத்தைக் கடைப்பிடியுங்கள், பொறுமையைக் கடைப்பிடியுங்கள். இக்காரியங்களில் நீங்கள் ஆர்வங்காட்ட துவங்கிவிட்டீர்கள். மேலும் முழுமையாக என்னுடைய சீஷர்களானபின்பு, சத்தியத்தைப் பற்றிய அறிவு உங்களுக்கு அருளப்படும். மேலும் இந்த சத்தியம் உங்களை விடுதலையாக்கி, தேவபுத்திரருக்குரிய அனைத்து ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் அது உங்களுக்குத் தரும். எஜமானருடைய ஆலோசனைக்கு செவிசாய்த்த சிலரே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர்.

### பெந்தெகொஸ்தே நாளில் ஆசீர்வாதங்கள் துவங்கின

இயேசுவின் இந்த வார்த்தைகள் குறிப்பாக பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல, ஆனால் பரிவிரக்கத்துடன் ஈர்க்கப்பட்ட பொதுவான யூதர்களுக்குமான வார்த்தைகளாக உரைக்கப்பட்டன. நிக்கோதேமுவும் இவர்களில் ஒருவராக இருந்திருக்கலாம். அவர் ஆவிக்குரிய விஷயங்களைப்பற்றி தடுமாற்றமடைந்திருந்தார். எப்படி ஒருவர் மறுபடியும் பிறக்கமுடியும் என்பதுபற்றி அவரால் கண்டுணரமுடியவில்லை. இயேசு இன்னும் மகிமைப்படுத்தப்படவில்லையாதலால், பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை என வாசிக்கிறோம். “ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்” –1கொரிந்2:14.

ஆனால் சிலர் தாங்கள் இயேசுவிடத்தில் ஈர்க்கப்பட, போதுமான அளவுக்கு அவரைக் கண்டுகொண்டார்கள். நிச்சயமாகவே அவரது வார்த்தைகள் உண்மையானவை

மற்றும் நமது தேசத்தைப் பற்றிய அவரது விமர்சனங்களும் உண்மையானவையே என அவர்கள் நேர்மையான இருதயத்துடன் கூறினர். இந்த தீர்க்கதரிசனங்களை அவர் எவ்வாறு நிறைவேற்றப்போகிறார் என நாம் அறியோம், ஆனால் அவரோ நம்மிடம், இவைகளைப் பற்றிக்கொண்டு பொறுமையாயிருங்கள், பின்னர் நீங்களே அவைகளை புரிந்துகொள்வீர்கள் எனக் கூறினார். ஐநூறு சகோதரர்களுக்கு மேல் அவற்றைப் பற்றிக்கொண்டனர். இயேசு வாக்களித்தபடி இவர்களுக்கு உண்மையிலேயே சீஷர்களாகும் சிலாக்கியம் தரப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாள் வந்தபோது, இயேசுவின் வார்த்தைகளில் நிலைத்திருந்த அனைவரையும் பரலோகப்பிதா ஏற்றுக்கொண்டு, கர்த்தருடைய குடும்பத்தினராகும்படி அவர்கள் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் ஆவிக்குரியவைகளை காணத்துவங்கினர். அவர்கள் ஒளியூட்டப்பட்டார்கள். முழு அளவிலான வெளிச்சமானது ஒரே நேரத்தில் வரவில்லை, மாறாக, நாட்கள் மற்றும் வருடங்கள் செல்லச்செல்ல அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவின் உண்மை சீஷர்களாக இருந்தார்கள். அதாவது இயேசுவின் பின்னடியார்களாக அவர்களை அங்கீகரிப்பது பிதாவானவருக்கு பிரியமாயிருந்தது. அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஆக்கினையிலிருந்து மாத்திரம் விடுவிக்கப்படாமல், பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் புதிய சித்தத்தை, புதிய மனதை பெற்றுக்கொண்டனர். மேலும் பரிசுத்தஆவியானது ‘‘தேவனுடைய ஆழமானவைகளையும்’’ அவர்கள் காணும்படியாக செய்தது.

நமது கர்த்தர் பிதாவிடம், ‘‘உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தப்படுத்தும், உமது வசனமே சத்தியம்’’ என ஜெபித்தார். பரிசுத்தஆவியினால் பிதாவானவர் வெளிப்படுத்தின அவருடைய தெய்வீகத் திட்டத்தையே இயேசு சத்தியம் எனும் வார்த்தையினால் இங்கு குறிப்பிடுகிறார். மேலும் ஒரு நேர்மையான இருதயத்தில் பெறப்படும் சத்திய அறிவின்மூலம் பரிசுத்தப்படுத்தும் வல்லமையானது வருகிறது. இந்த பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது பிரித்தெடுப்பது என்பது, குறிப்பாக சொல்லவேண்டுமானால், பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களுடன் துவங்கி, இன்னும் தொடர்ந்து செயல்படுகிறது. ஒரு நபர் தனது வாழ்க்கையில் சத்தியத்தின்படியான தாக்கத்தை அனுமதிக்கும் காலம்வரை, இந்த பரிசுத்தமாக்கப்படுதல் என்பது வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கும். ஆதார வசனத்திற்கும், மேற்ச்சொன்ன வசனத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் காணலாம். பிந்தைய வசனமானது அது யேகோவா தேவனின் வார்த்தையாகும். ஆனால் ஆதாரவசனத்தின் வார்த்தையானது இயேசுவின் வார்த்தையாகும். இயேசு கூறும்போது, நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருப்பீர்களானால், நீங்கள் பரமபிதாவோடு மென்மேலும் நெருங்கி வருவதோடு, அவருடைய சித்தத்தையும், அவரது வழியையும் அவருடைய வழிமுறையையும் அறிவீர்கள், இதனால் நீங்கள் அவருடைய வார்த்தையையும் அறிவீர்கள். அனைத்துக் காரியங்களும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றன. பிதாவின் சித்தத்தைப் பார்த்து செயல்படுவதால் பரிசுத்தமாக்கப்படுதல் என்னும் செயல்முறை தொடர்கிறது. இயேசு எல்லாரையும் நோக்கி, ‘‘நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்’’ என்றார். என் ஒருவன் மூலமாக மட்டுமே நீங்கள் பிதாவினிடத்தில் சேர்ந்து அவருடைய புத்திரர்களாகமுடியும். மேலும் என்னில் நிலைத்திருங்கள் உங்களுக்கு அது மகத்தான முடிவை அளிக்கும்.

### நம்முடைய அனைத்து ஆசீர்வாதங்களுக்குமான வாய்க்கால்

ஆகவே கிறிஸ்துவானவர் எல்லா வகையிலும் நமக்குப் போதுமானவராக தேவன் நமக்கு வழங்கியிருக்கிறார் என கண்டுணருகிறோம். ‘‘அவரே நமக்கு ஞானமும் நீதியும்(நீதிமானாக்கப்படுதல்) பரிசுத்தமும், மீட்புமானார்(விடுதலை)’’ – 1கொரிந்1:30. நமக்கான அவருடைய தியாகபலியின் வேலையை கற்றறிவதன் மூலம், தேவையான ஞானம், அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றை முதலில் பெறுகிறோம். இவற்றின் மூலம் அவருடைய பலியின் புண்ணிய கிரயத்தின்மூலம், நாம் பிதாவிடம் வரமுடியும். நம்முடைய வழிகளிலெல்லாம் அவரே நம்முடைய ஞானமாக இருக்கிறார். பிதாவாகிய தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்பே மகிமையான ஒரு திட்டத்தை கொண்டிருந்தார். வீழ்ச்சியடைந்தவுடன் இவ்விஷயம் ஏதேனில் சுட்டிக்காட்டப்பட்டது. ஏற்ற காலங்களில் அவர் ஏனோக், ஆபிரகாம், பின்னர் மோசே மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாகவும், அந்த திட்டத்தைப் பற்றி மேலும் அறிவித்தார். ஆனால் அதன்மூலம் உலகம் எவ்வாறு பயனடைகிறது என்பது அனைத்தும் மறைக்கப்பட்டு, அனைத்தும் இரகசியமாகவே வைக்கப்பட்டது.

இயேசு வராதவரை ஜீவப்பாதை திறக்கப்படவுமில்லை, வெளியாக்கப்படவுமில்லை. ‘‘அவர்(கிறிஸ்து) சுவிசேஷத்தினால் ஜீவனையும் அழியாமையையும் வெளியரங்கமாக்கினார்’’ சுவிசேஷத்தின்

சாராம்சம் இயேசு வருவதற்கு முன்பு ஒருபோதும் அறிவிக்கப்படவில்லை. மிகக்குறைவாகவே அறியப்பட்டிருந்தது. இந்த இரட்சிப்பைக் குறித்து அப்.பவுல் கூறும்போது, “முதலில் கர்த்தரால் அறியப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவைகளாலே நமக்கு உறுதியாக்கப்பட்டது”என்கிறார் – எபி2:3 . நமது கர்த்தர் அதைக் குறித்து பேச ஆரம்பித்தார். ஆனால் சுவிசேஷத்தின் இரகசியம் அதினுடைய மறைபொருள்கள், பெந்தெகொஸ்தே நாள் வரை முற்றிலும் வெளியாக்கப்படவில்லை. இயேசு தாம் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபின், அதை தெளிவாக புரிந்துகொள்ளத் தொடங்கினார். அதாவது, அதுவரை ஜீவனும், அழியாமைக்குமான வழியை அவர் நம்முன் ஏற்படுத்த துவங்கவில்லை. “தேவனுடைய ஆழங்களுக்குள் நுழையவேண்டுமானால், சீஷர்களும் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படவேண்டியிருந்தது. அதுவரைக்கும் அவருடைய வார்த்தைகள் அவர்களுக்கு உவமைகளாக இருந்தன.

### இயேசுவே நம்முடைய நீதியானார் Jesus our righteousness

அவர் நம்முடைய ஞானமாக இருப்பதுடன், இயேசு நம்முடைய நீதியுமானார். நம்முடைய பாவங்களை அவர் மூடுகிறார். அவர் தமது சொந்த நீதியை, அவருடைய பலியின் புண்ணியத்தை நம்மீது சுமத்துகிறார். இந்த சுமத்தப்படுதல் நம்மை முழுமையான நீதியின் நிலைக்குக் கொண்டுவருகிறது. அதாவது நிஜமாக அல்ல, மாறாக நீதியாக எண்ணப்படுகின்ற நிலையாக இருந்தது. தேவன் ஏற்பாடு செய்திருந்த இந்த வழியில் அவர் அங்கீகரிப்பதற்கு பிரியமாய் இருந்தார்.

நம்முடைய கர்த்தர் எல்லாருக்கும் நீதியாக மாறுவதில்லை. அதாவது, அவருடைய வார்த்தைகளுக்கு கொஞ்சமாக செவிசாய்ப்பவர்களுக்கும், அவர் நீதியாக ஆவதில்லை. மாறாக, பிதாவின் சித்தத்திற்கு தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்தவர்களுக்கு மட்டுமே. மேலும் இதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கிறது. இந்த சுவிசேஷ யுகத்தில் அவருடைய சரீர அவயவங்களாக ஆவதற்கு தங்களைத் தாங்களே ஒப்புக்கொடுத்தவர்கள் மட்டுமே, மேலும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே இந்த விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதன் மூலம் பயனடைவார்கள். இப்போது மற்றவர்கள் மரணத் தீர்ப்பிற்கு தீர்க்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்தயுகத்தில் மற்றவர்கள் அனைவரும் அவரிடத்தில் சேருவார்கள். ஆனால் இப்போது அவரிடம் வருபவர்கள் மட்டுமே அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க, விசுவாசத்தினால் நீதிமானாகுதலை அடைகின்றனர்.

### இயேசு நம்முடைய பரிசுத்தம் ஆனார் Jesus our sanctification

இயேசுவின் சீஷர்களாக மாறுபவர்களின் தரப்பில், அவர்களது அர்ப்பணிப்பின் படியே என்பதே பரிசுத்தமாக்கப்படுதல் என வேதம் கூறுகிறது. ஆனால் இது, அவர் மூலமாக நமக்கு வரும் அதே பரிசுத்தமாக்கப்படுதல் அல்ல. “உங்களை பரிசுத்தப்படுத்திக்கொள்ளுங்கள் உங்களை பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நானே” அதாவது உங்களை நீங்களே பிரித்தெடுத்துக் கொள்ளுங்கள், பின் நானும் உங்களைப் பிரித்தெடுத்துவிடுகிறேன். நீங்கள் வர விரும்பும் இந்த இடத்தில் நான் உங்களை வைப்பேன் என்று தேவன் கூறுகிறார். அவர் மூலம் பிதாவினிடம் வரும் நம் அனைவருக்கும் இயேசு நீதியாக இருப்பது மட்டுமல்லாமல், அவர் மூலம் நாம் பரிசுத்தமுமாக்கப்படுகிறோம். அதாவது, முழுமையாக பிரித்தெடுக்கப்படுகிறோம். நாம் அவருக்குள்ளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதினால் அவருடைய கிருபையும், பரிந்துபேசுதலும், முழுமையான மற்றும் இறுதியான பரிசுத்தத்தை அடைய நமக்கு உதவுகிறது.

புதிய சுபாவத்திற்காக நம்மை பரிசுத்தஆவியினால் ஜெநிப்பித்து, ராஜரீக ஆசாரியக் கூட்டத்தின் வருங்கால அங்கங்களாக, அபிஷேகம் செய்யப்பட்டவரின் சரீரத்தின் வருங்கால அங்கத்தினர்களாக ஆக்குவதன் மூலம், தேவன் நம்மைப் பிரித்தெடுக்கிறார். மேலும் இதுவே நாம் மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமடையும் முழு அனுபவத்திற்குள் கொண்டுசெல்லும் ஒரு முன்–ருசிபார்த்தலாக அல்லது நம்முடைய சுதந்திர பாகத்திற்கான அச்சாரமாயிருக்கிறது என்று வேதத்தின்படி அழைக்கப்படுகிறது. ஆனால் இந்த சுதந்திரத்தின் அச்சாரம் நமக்குள் ஏற்கனவே தொடங்கியிருக்கின்ற பரிசுத்தமாகுதல் படிப்படியாக முன்னேறி முழுமையடைவதற்கான நோக்கத்தில் நமக்குத் தரப்படுகிறது. கிறிஸ்துவின் மூலம் நாம் இதை அடைகிறோம்.

### இயேசு நம்முடைய மீட்பானார் Jesus our deliverance

திருப்திகரமான முன்னேற்றத்தை அடைபவர்கள், உயிர்த்தெழுதலில் பாவத்திலிருந்தும், மாம்சத்தின் எல்லா அபூரணங்களிலிருந்தும், குறிப்பாக, மாம்சத்திலிருந்தும் முழு விடுதலையை அடைவார்கள். இந்த முழு விடுதலையானது முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பெற்றுக்கொள்ளப்படும். இவ்வகையில் இயேசு நம்முடைய மீட்பானார். அதன்பின்பு நாம் தெய்வீக தளத்தில் தேவனுடைய புத்திரர்களின் முழு முழுமையை அடைந்திருப்போம்.

இவையனைத்திலும் இயேசுவே மையமாக இருக்கிறார். அவர் மூலமாக மட்டுமே நாம் இந்த ஆசீர்வாதங்களை பெறமுடியும். பிதா அவற்றை கொடுக்கும்போது, பிதாவின் பிரதிநிதியாகிய அவருடைய குமாரன் மூலமாகவே அவைகள் தரப்படுகின்றன. இயேசு பிதாவின் ஆவியைப்பெற்று அதை நம்மேல் ஊற்றுகிறார். இது பிரதான ஆசாரியனின் அபிஷேகத்தில் நிழலாக படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. பரிசுத்த அபிஷேகத் தைலமானது அவருடைய தலையின்மேல் ஊற்றப்பட்டு, அது அவருடைய உடல் எங்கும் வழிந்தோடியது. அதே விதமாகவே நாமும் பிரதான ஆசாரியரின் அங்கத்தினர்களாக, நம் தலையானவரின் மூலம் அபிஷேகம் பண்ணப்பட்டோம்.

“இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் நம்மையும் இயேசுவின்மூலம் எழுப்புவார்”. எப்படியெனில், இயேசுவே துடிப்பான பிரதிநிதியாக இருப்பார். ஆனால் தெய்வீகத் திட்டத்தில் இயேசுதாமே தம் சொந்த நாமத்தினால் நிறைவேற்றவேண்டிய சிலஅம்சங்கள் உள்ளன. உதாரணமாக, உலகின் ஆசீர்வாதம் மற்றும் மேம்படுத்துதல் ஆகும். பிதாவானவரே முழு தெய்வீகத் திட்டத்திற்கும் காரணகர்த்தாவாக இருக்கும் பட்சத்தில், இந்த ஆசீர்வாதம் பிரத்தியேகமாக குமாரனுடைய பலியின் மூலம் உலகிற்கு வருகிறது. கிறிஸ்து ஆயிரமாண்டு யுகத்தின் வேலையைச் செய்தபிறகு, முழு மனுக்குலத்தை பிதாவிடம் ஒப்படைப்பார்.

ஆனால் திருச்சபைக்கான அவருடைய பணி வேறுபட்டது. “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் தமது மிகுந்த இரக்கத்தின்படி நம்மை ஜெநிப்பித்தார்” –1பேது1:3,4. குமாரன் மூலமாக நாம் தெய்வீக தயவைப் பெற்றிருந்தாலும், நம்மை ஜெநிப்பித்தவர் குமாரன் அல்ல. இந்த விசேஷித்த தெய்வீக தயவை பெறுவதற்கான விலைஅல்லது செல்லும் செலவு என்பது நம்முடைய வாழ்க்கையை தியாகம் செய்வதேயாகும். சபையானது குமாரனிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளும் விஷயமானது குறிப்பாக –நீதிமானாக்கப்படுதலாகும். ஆனபொழுதிலும் இந்த நீதிமானாக்கப்படுதல் என்பது பிதாவினுடையதாகும். இது ஒரு நிஜமான நீதிமானாக்கப்படுதல் அல்ல, மாறாக சுமத்தப்பட்ட நீதிமானாக்கப்படுதலாகும்(imputed justification). உலக ஜனங்களுக்கு முன்னதாகவே நாம் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலன்களாக இப்போதே அவருடைய தயவைப் பெறுவது என்பது பிதா தரப்பில் நமக்கான ஒரு சிறப்பு ஏற்பாடாகும்.

நம்முடைய தேவன் ஒரு அற்புதமான தேவன், மற்றும் அவரது யுகங்களுக்கான மாபெரும் திட்டமானது விவரிக்கமுடியாத ஆச்சரியமான ஒன்றாகும்! கண்கள் யாவும் திறவுண்டுபோய், கேளாத காதுகள் யாவும் கேட்கும்படியாக திறவுண்டுபோகும் என்பதை அறிந்தவர்களாக, இந்த சுவிசேஷயுகத்தில் அநேகருக்கு மறைக்கப்பட்டிருக்கும் மகிமையான விஷயங்களைக் காண, நம்முடைய கண்கள் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பதை எண்ணி, நம் இருதயங்கள் களிகூறுகின்றன.

### அவர்கள் சத்தியத்திலிருந்து தங்கள் செவிகளை விலக்கிக்கொண்டனர்

கர்த்தரின் பிரசங்கத்தைக் கேட்ட பலதரப்பட்ட மக்களிடையே எப்போதும் இருவேறு எதிர் விளைவுகளை ஏற்படுத்தியது. ஒருவகுப்பார் அவரால் கவரப்பட்டனர், மற்றவர்கள் விலகிச்சென்றனர். பெருமை மற்றும் அகம்பாவம் நிறைந்தவர்கள், ஒளியைவிட இருளை விரும்புகிறவர்கள் தங்களுடைய செயல்கள் தீயவை என்பதாலும் இருக்கிறார்கள். இத்தகையோர் தாங்கள் சத்தியத்தின்ஒளியை ஏற்றுக்கொண்டால் அச் சத்தியங்களுக்குத் தக்கவாறு தங்களுடைய குணாதிசயங்களை உறுதிப்படுத்திட வேண்டுவது அவசியமாக இருப்பதாலும், அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் போதனைகளை வெறுத்தனர். தற்காலத்தில் பின்பற்றப்படும் முறைமைகளின்படி, அதாவது ஜனங்களின் நல்லெண்ணம் மற்றும் பங்களிப்பின் ஆதரவை சார்ந்திருந்து, கர்த்தர் ஊழியப்பணியை மேற்கொண்டிருந்தாரானால், அந்த ஆதரவு பெரும்பாலும் மிகக்குறைவாகவோ அல்லது குறைந்தபட்சமாக மிகவும் ஏற்ற இறக்கமானதாகவே இருந்திருக்கும்.

சில சமயங்களில் திரளான ஜனங்கள் அவருடைய சாட்சியைப் பெற்றனர். ஆனால் பின்னர் அவரைவிட்டு விலகினர், தெய்வீக சத்தியத்தின் போதனைகளை அவர் தொடர்ந்து வலியுறுத்தியதால், அவரோடுகூட அவர்கள் நடக்கவில்லை(லூக் 4:14–29). சில சமயங்களில் திரளான ஜனங்கள் அவருடைய போதனைகளைப் பற்றிக்கொண்டு, “அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளை கண்டு வியந்தனர். ஆனாலும் மீண்டும்மீண்டும் அவரைக் கைவிட்டனர். வெகு சிலரே மிஞ்சியிருந்தனர்(யோவா 6:60–69).

சுவிசேஷ ஊழியர்கள் என தங்களை கூறிக்கொள்பவர்கள் தேவனுடைய முழு ஆலோசனைகளை, எஜமானருடைய முன்மாதிரிகையைப் பின்பற்றுவார்–களானால், இன்றைய பல்வேறு ஆலயங்களில் எப்பேர்ப்பட்ட திகைப்பு உண்டாயிருக்கும்! அவர்கள் எவ்வளவு சீக்கிரம் பிரபலமற்றவர்களாகி சபைகளை உடைத்ததாக குற்றஞ்

சாட்டப்படுவார்கள்! தேவனுடைய சேவைக்காகவும், கிறிஸ்துவின் போதனைகளுக்காகவும் தங்களை தத்தம் செய்திருப்பதாக வெளித்தோற்றத்தின்படி காட்டிக்கொள்ளும் பெரிய தேவாலயங்கள் சத்தியத்தில் நிலைத்திருக்காது. சபையினுடைய ரசனைகள் மற்றும் யோசனைகளை மறைமுகமாக அறிந்த பதவியிலுள்ள நபர்களிடமிருந்து, தங்களுக்குப் பிரியமான மற்றும் நீண்ட சொற்பொழிவுகளினால் தங்களை பிரியப்படுத்திக்கொள்ள வேண்டி, ஜனங்கள் பொழுதுபோக்கிற்காக அங்கு செல்கின்றனர். அவர்கள் விரும்பியதற்கு தங்கள் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் சத்தியத்தை விரும்புவதில்லை.

சிறிது காலத்திற்கு மட்டுமே கர்த்தரைப் பின்பற்றிவிட்டு, பின்னர் துறந்தவர்கள், பின் கண்டிப்பாக சீஷர்களாக இருப்பதை நிறுத்திவிட்டு, இனி ஒருபோதும் அவ்விதமாக அங்கீகரிக்கப்படாத நிலைக்கு போவதுடன், மேலும் தாங்கள் அவருடைய சீஷர்கள் எனக் கூறிக்கொள்ளவும் எண்ணுவதில்லை. சீஷன் என்பவர் ஒரு கற்றுக்கொள்கிற மாணவன். எப்போது ஒரு மனிதன் மாபெரும் போதகராகிய கிறிஸ்துவின் மாணவனாக இருப்பதை நிறுத்திக்கொள்கிறானோ, அவன் இனியும் அவருடைய சீஷராக இல்லை. கர்த்தர் வந்தபோது, அவருடைய நாமம் மனுஷரிடையே நிந்தையாக இருந்தபோதும், இது மிகவும் வெளிப்படையாய் இருந்தது. ஆனால் பின்னர் அவருடைய பிரசன்னம் திரும்ப பெறப்பட்டதும், அவருடைய போதனைகள் நேர்மையற்ற முறையில் மனித தத்துவங்களினால் கலக்கப்பட்டபின்பு, அந்த நிந்தனைகள் நீக்கப்பட்டு, அவற்றை உண்மையில் வெற்றிடமாக்கியது. அப்போது மனிதர்கள் தங்களை அவருடைய சீஷர்கள் என கூறிக்கொள்ளத் தொடங்கினர். அவருடைய போதனைகள் முற்றிலும் நிராகரிக்கப்பட்டு நீண்ட காலத்திற்குப் பின்பு நடந்த ஒன்றாகும்.

### உண்மையான சீஷத்துவத்தின் வெகுமதி

"அப்பொழுது நீங்கள் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்"என்ற கர்த்தருடைய வார்த்தையானது, உண்மையான சீஷர்களுக்கும் வெறும் பெயரளவிலான சீஷர்களுக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிக்கிறது. நாம் தொடர்ந்து இயேசுவினுடைய உண்மையான சீஷர்களாக இருக்கவிரும்புவதால், வெளிப்படுத்தப்பட்ட நிபந்தனையை, அதாவது, "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் உண்மையிலேயே என் சீஷராயிருப்பீர்கள்" என்பதை இலக்காக வைப்போமாக.வெறுமனே பெயரளவிலான சீஷர்களைப்போல பாசாங்குத்தனம் செய்வது கர்த்தருக்கு அருவருப்பானதாகும்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆசீர்வாதமான முதல் படி என்னவெனில், கிறிஸ்துவை நமது மீட்பராகவும், கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாக நம்மை முழுமையாக பிதாவிடம் ஒப்படைப்பதாகும். ஆனால் இந்த படியின் வெகுமதியானது, உண்மையான சீஷர்களுடைய மனப்பான்மையில், அவருடைய உபதேசத்தில் முற்றிலும் நிலைத்திருப்பதைப்பொறுத்து இருக்கிறது. தெய்வீக சத்தியத்தின் எளிமையிலிருந்து விலகி, நம்முடைய சொந்த போதனைகள் மற்றும் புதிய கோட்பாடுகளைத் தேடுவது அல்லது மனிதக் கணிப்பில் ஞானிகளாகவும், இந்த உலக மதிப்பீட்டின்படி உயர்ந்தோராகவும் கருதப்படுவோரை உள்ளிழுத்துக்கொள்வது பெருமையின் தன்மையாகும்.

சீஷத்துவத்தில் நிலைத்திருப்பதன் வெகுமதி என்னவெனில், "சத்தியத்தையும் அறிவீர்கள்" என்பதாகும். "எப்போது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தைக் கற்று உணரமுடியாதவர்களாக" இருப்பர் என்பதல்ல (2தீமா3:7). இதுவே அநேகர் செய்யும் தவறாகும். கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருக்கத் தவறினால், கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்து அல்லது திசைதிருப்பி, சத்தியத்திற்கு எதிர்மாறான கொள்கைகளை அமைக்கின்ற பல்வேறு மனித தத்துவங்களை அவர்கள் ஆராய்ச்சி செய்வர். இந்த மனிதக் கோட்பாடுகளில் சத்தியத்தைத் தேடுபவர்களுக்கு அவர்கள் அதைக் கண்டுபிடிப்பார்கள் என எவ்வித வாக்குத்தத்தமும் இல்லை, அது நடக்கவும் நடக்காது.

தெய்வீக சத்தியங்களானது தெய்வீக நியமன வாய்க்கால்களாகிய நம் கர்த்தர், அப்போஸ்தலர்கள், மற்றும் தீர்க்கதரிசிகள் போன்றவர்கள் மூலமே கண்டடையமுடியும். தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களது ஏவப்பட்ட எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளில் நிலைத்திருப்பதும், அவற்றைப் படிப்பதும் தியானிப்பதும், அவைகள்மீது முழுமையாக நம்பிக்கை வைப்பதும், அவைகளோடு நம் குணங்கள் ஒத்துப்போவதுமே கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருப்பதாகும். அப்.பவுல், எபேசி4:11–15, 1கொரிந்12:12–14ல் பட்டியலிட்டபடி, கிறிஸ்துவின் சரீரமாகிய நம் சகோதரரிடமிருந்து நமது கர்த்தர் எழுப்பும் அனைத்து உதவிகளுக்கும் செவிசாய்ப்பதோடும் இது இணக்கமாகிறது. கிறிஸ்துவின் சரீரத்தை சத்திய அறிவில் தெளிவு அடையச்செய்யவேண்டி அவ்விதமான உதவிகளை கர்த்தர் எப்போதும் எழுப்புவார் முடிவுவரை எழுப்புவார். ஆனால் ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களுடைய போதனைகள், தவறில்லாத வார்த்தைகளினால் கவனமாக நிரூபித்துக் கொள்ளவேண்டியது அவர் தம் கடமையாகும்.

இவ்விதமாக, வாஞ்சையுள்ள மற்றும் நேர்மையான சீஷர்களாக நாம் கர்த்தருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால் நாம் நிச்சயமாகவே “சத்தியத்தை அறிவோம்”. “தற்கால சத்தியத்தில் நிலைநாட்டப்–படுவோம்”(ஏற்றகால சத்தியம்). மேலும் “சத்தியத்தில் வேரூன்றி, அடித்தளமிடப்பட்டு, விசுவாசத்தில் உறுதியாய் இருப்போம்”. மேலும் “நமக்குள்ளிருக்கிற நம்பிக்கையைக் குறித்து விசாரிக்கிறவர்களிடத்தில்உத்தரவு சொல்லக் கூடியவர்களாகவும்”, “பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடக்கூடியவர்களாகவும்”, “நல்ல போராட்டத்தைப் போராடக் கூடியவர்களாகவும்”, “நல்ல சாட்சி பகருகின்றவர்களாகவும்”, “கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல போர்ச்சேவகனாய் தீங்கனுபவிப்பவர்களாகவும், இப்போராட்டத்தில் முடிவுவரை இருப்போம்.

ஒரே தாண்டுதலில் அல்லது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நாம் சத்தியத்தை அறிகிற அறிவுக்குள் வருவதில்லை. மாறாக படிப்படியாக, சீராக சத்தியத்திற்குள் அழைத்துச் செல்லப்படுகிறோம். ஒவ்வொரு படியும் உறுதியான மற்றும் நிச்சயமான முன்னேற்றத்தை அடையச்செய்து, சத்தியத்தின் அறிவு மற்றும் குணலட்சணங்களில் உறுதிப்படுதல் என்கிற இரண்டிலும் கூடுதலானவற்றை அடைய வழிவகுக்கும்.

இவ்விதமாக படிப்படியாகப் பெறப்பட்ட சத்தியமானது, பரிசுத்தப்படுத்தும் சக்தியாக மாறி, நம் வாழ்வில் நீதி, சமாதானம், பரிசுத்தஆவிக்குள்ளான மகிழ்ச்சி, அன்பு, சாந்தம், விசுவாசம், பொறுமை மற்றும் ஒவ்வொரு நற்பண்புகள், ஒவ்வொரு கிருபையாகிய ஆசீர்வாதமான பலன்களைக் கொண்டுவந்து, காலத்துக்கேற்றாற்போல் மகிமையான முதிர்ச்சியடையச்செய்யும்.

மெய்யான சீஷர் சத்தியத்தை அறிந்து அதன்மூலம் பரிசுத்தமடைவது மட்டுமல்லாமல், “சத்தியம் உங்களை விடுதலையாக்கும்” எனவும் கர்த்தர் கூறினார். சத்தியத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வாதமான அனுபவங்களினால் அதினுடைய விடுதலையாக்கும் வல்லமையைப் பற்றியும் அறிந்துகொள்வார்கள். நேர்மையான இருதயத்தில் அச்சத்தியத்தை என்ன அளவிலாயும் பெற்றுக்கொண்டவுடன், அது பாவம், அறியாமை, மூடநம்பிக்கைகள் மற்றும் பயத்தின் கட்டுக்களை தகர்த்தெறிய ஆரம்பிக்கிறது. ஆரோக்கியத்தை மீட்டெடுக்கும் அதின் கற்றைகள், நம் இருதயம் மற்றும் மனதின் இருளடைந்த பாகங்களில் ஊடுருவி, நம்மை முற்றிலும் பலப்படுத்துகிறது.மேலும் நம் அழிவுக்குரிய சரீரங்களை உயிர்ப்பிக்கிறது.

## உமது வார்த்தைகளின் உட்பிரவேசம் ஒளியைத் தருகிறது The entrance of Thy words giveth light

பாவமானது சத்தியத்தின் வெளிச்சத்தை சகிக்காது. மேலும் போதுமான அளவு வெளிச்சத்தைப் பெற்றபின்பும் தொடர்ந்து பாவத்திலேயே வாழ்ந்து அதன் சிதைவுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் அவ்வெளிச்சத்தை இழந்துவிடுவது என்பது தவிர்க்கமுடியாததாகிவிடும். ஏனெனில் அவர்கள் அதற்கு தகுதியற்றவர்களாகிவிடுகின்றனர். அறியாமையும் மூடநம்பிக்கையும் இந்த வெளிச்சத்திற்கு முன்பாக ஒழிந்துபோகவேண்டும். இவ்வாறு விடுதலை பெறுவது எப்படிப்பட்ட ஆசீர்வாதமான அறிந்துணர்தல் ஆகும்! இருப்பினும் இலட்சக்கணக்கானவர்கள் இன்னும் இருளடையச்செய்யும் தவறுகளின் ஆதிக்கத்தின்கீழ் உள்ளனர். அதினுடைய வஞ்சகத்தினால் அவர்கள் அடிமைத்தனத்திற்கும் சீரழிவுக்குமாக, பிசாசினுடைய சில அடிப்படையான ஆயுதங்களுக்கு பயபக்தியாய் இருக்கிறார்கள். ஏனென்றால் அவைகள் தெய்வீகமானவைகள் என மாய்மாலமாக உரிமை கோருகின்றனர். மேலும் அவர்கள் தேவனை ஒரு பழிவாங்கும் கொடூரமானவராக எண்ணி, அவருக்கு அஞ்சும்படி செய்கின்றனர். ஏனெனில் அவருடைய பெரும்பாலான சிருஷ்டிகளை நித்திய வேதனைக்கென்று வைத்திருக்கிறார் என்கின்றனர். நாம் சத்தியத்தைப் பெற்றவர்களாக அந்த பயங்கரமான கற்பனையிலிருந்து விழித்தெழுப்பப்பட்டு, நம்மீதிருந்த சாத்தானின் அடிமைத்தனம் நொறுக்கப்பட்டிருப்பதால் தேவனுக்கு நன்றி! ஒளியானது நம் இருளை சிதறடித்தது.

நீண்டகாலமாக உலகை ஆண்டுவந்த அரசியல் மற்றும் மதரீதியான அமைப்புகள் பயங்கரமாக அசைக்கப்படுவதினால், தற்போது நாம் காண்கிறபடி உலக முழுவதின்மேலும் வரவிருக்கின்ற பயத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். வரவிருக்கும்அராஜகம் மற்றும் பயங்கரத்தின் சாத்தியமான விளைவுகளைக் குறித்து, எல்லா சிந்திக்கும் மக்களும் அச்சத்தில் இருக்கின்றனர். மோசமான நெருக்கடியை நாம் மிக விரைவாக நெருங்கிக்கொண்டிருப்பதாலும், ஆபத்து அதிகமாவது தெளிவாக இருப்பதாலும், அனைவரின் எச்சரிக்கையும் அதிகரித்து வருகிறது. ஆனபொழுதிலும் இவையனைத்தின் மத்தியிலும், உலகம் விரைவில் கடந்துசெல்லவேண்டிய பயங்கரமான முரண்பாடுகளைப் பற்றிய, தவறில்லாத தேவனுடைய வார்த்தையில்

நிலைத்திருக்கும் கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்கள், பயப்படுவதற்கு பதிலாக களிகூறுவார்கள். ஏனெனில் இந்த வலுவான புயலை அனுமதிப்பதன்மூலம், உலகின் தார்மீக சூழலை அழிக்கவேண்டுமென்கிற தேவ நோக்கத்தையும், அப்புயலுக்கு பின்பு அவருடைய ஏற்பாட்டின்படி, சத்தியத்தில் அறிவுறுத்தப்பட்டபடி, நிலையான சமாதானம் வரும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். இம்மாதிரியான சூழ்நிலைகளின் அவசியத்தை அவர்கள் உணர்ந்து, மனிதருடைய கோபம் உம்முடைய மகிமையை விளங்கப்பண்ணும். மேலும் சகலமும் நன்மைக்கேதுவாய் மாற்றுவார் என தெய்வீக வழிநடத்துதலின் பேரில் திடநம்பிக்கையுள்ளவர்களாய் இருப்பார்கள்.

"என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என்னுடைய சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற வார்த்தையானது ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்தைக் குறிக்கிறது. அன்பான சகோதர சகோதரிகளே, கர்த்தரிடமிருந்து அற்புதமாக கிருபையைப் பெற்ற நாம், அதில் நிலைத்திருந்து, வஞ்சிக்கிற உபதேசங்களுக்கு செவிசாய்க்காமல், சத்தியத்தின் ஆசீர்வாதமான பலன்களை நம் வாழ்வில் கொண்டுவராமலிருக்கலாமா? எல்லா சூழ்நிலைகளிலும் அதற்கு உண்மையாயிருந்து, அதற்கு எதிராக வரும் எல்லா தாக்குதல்களுக்கும் எதிர்த்து, அதற்கு வரும் நிந்தனைகளையும் தாங்கிக்கொள்ள வேண்டாமா? நம்முடைய உண்மைத்தன்மையினாலும், பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவதினாலும், அந்த மகிமையான ஒளியினை மதித்துணர்ந்திருப்பதை நிரூபிப்போமாக!

------

## R 1064

### "எல்லாம் புதிதாயின"

### ALL THINGS NEW

நூற்றாண்டுகளாக இந்த உலகம் பழமையாகத்தான் உள்ளதுவே,

ஆனால் இவைகளுக்கு அவள் தலைசாய்ப்பதில்லையே,

அவள் தன் துன்பங்களை இருதயத்தில் தேக்கி வைத்துள்ளாள்,

அவள் தன்னகத்தே அநேகம் இறந்தவர்களை பிடித்து வைத்துள்ளாள்,

அவள் பாடும் கீதத்திலே சோகம் இழைந்தோடுகின்றதே,

கண்ணீர்த் துளிகள் அவள்மீது விழுகின்றதே,

சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவிக்கிறதே..

முன்பு இருந்தவைபோன்று மீண்டும் எல்லாம் உருவாக்கப்பட எவ்வளவு காலம்ஆகும்?

அவள் புன்னகை சூரியனைப்போன்றே மேலும் பிரகாசமாய் கூடிக்கொண்டே போகின்றதே,

வானங்கள் அவளை அபரிமிதமாகவே ஆசீர்வதிக்கப் பிரியப்படுகின்றதே,

நீதியில் வாசம் பண்ணும் அழகான ஒன்று என்னவாக இருக்கும்?

ஓ, மகிழ்ச்சியான உலகமே! பரிசுத்த காலமே!

தவறானது இறந்துவிடும்போது சண்டைகள் ஓய்ந்துவிடும்போது,

பரலோகத்தின் மணிகள் யாவும் சமாதான இன்னிசையாகவே ஒலிக்கப்பெறுமே,

இந்த பிரபஞ்சத்தை அழிக்கும்அனைத்திற்கும் புதிய பூமியில் இடம் இருக்காதே,

சாபங்கள் இனி இருப்பதில்லை,

உடைந்த உள்ளங்களே, உங்கள் கதறல்களை நிறுத்திக்கொள்ளுங்கள்,

வாக்களிக்கப்பட்ட காலை – பகல்பொழுது உங்களுக்காகவே விடிந்துகொண்டிருக்கிறது,

அரியணையில் வீற்றிருப்பவர் கூறுகிறார்; நான் எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன் என்றே,

இறந்தவர்க்காக நாம் துக்கம் கொண்டாடினாலும், அவர்கள் விரைவில் எழுந்திருப்பாரே,

தொலைந்துபோனவர்கள் மீண்டும் தங்கள் பழைய நிலைக்கு வந்திடுவாரே,

ஓ! நம் மனித இருதயங்கள், அந்த பரிசுத்த வார்த்தையின்றி முறிவுபடுமே

மங்கின கண்களோ மேல்நோக்கிப் பார்த்திடுமே,

கவலைகொண்ட இருதயங்கள் அகமகிழுமே – சர்வ வல்ல தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கண்டே,

அந்த தீர்க்கதரிசனக் குரலின் சத்தத்தில்

"நான் சகலத்தையும் புதிதாக்குவேன்"

--------

## R 5496

கர்த்தாவே, உம்முடைய சர்வாயுத வர்க்கத்தால் என்னை அணிவியும்;

உம்முடைய வல்லமையினால் என் பெலவீனத்தைத் தாங்கும்;

உம்முடைய ஜெயங்கொள்ளும் பட்டயத்தை தொடையில் கட்டும்

அச்சுறுத்தும் போராட்டத்தில் என்னை பாதுகாத்தருளும்.

விசுவாசத்தின்மேல் விசுவாசத்தையும், கிருபையின்மேல் கிருபையையும் பெற்று

இப்படி உம் பெலத்தில் நான் முன்னேறுவேன்.

உம்முடைய முகத்திற்கு முன்பாகத் தோன்றும்வரை

மகிமை முடியும்வரை.. எப்பேர்ப்பட்ட கிருபை துவங்கப்பெற்றது!

--------